**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 25.8.2011**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண்மையே பொருளாதாரத்தின் உயிர்நாடி ஆகும். தமிழகத்தில் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, வேளாண்மைத் தொழிலுக்கு புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதன் அடிப்படையில், இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை எனது அரசு நிர்ணயித்துள்ளது. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாது, வேளாண் பெருமக்கள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து, அவர்களின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் எனது அரசு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்பு கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், உறுப்பினர்களின் விவசாய விளைப் பொருட்களுக்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளைப் பொருட்களின் விலை வீழ்ச்சி அடையும் போது, விவசாயிகள் தங்கள் விளைப் பொருட்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக் கடன் பெற்றுக் கொள்வதுடன், விலை ஏற்றத்தின் போது விளைப் பொருட்களைக் கிடங்கில் இருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்பதால், விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் அதிக விலை கிடைக்கிறது.

நடப்பு ஆண்டில், 185 கோடி ரூபாய் அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், கூட்டுறவுத் துறையில் தற்போது உள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதாலும், மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுபடுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, NABARD வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று, மொத்தம் 105 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில், மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், 1 லட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்கு கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுவதால், விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 26 கோடியே 40 லட்சம் ரூபாய் அளவுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

******